# அறிவித்தல்

## தேர்தல் ஆணைக்குழு

## 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4)(அ) பிரிவின் கீழான அறிவித்தல்

01. 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(4)(அ) பிரிவிற்கமைய, தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக கணிக்கப்படுவதற்கான விண்ணப்பங்கள் **2026.01.28** ஆம் திகதியிலிருந்து **2026.02.28** ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். அத்தகைய விண்ணப்பப்படிவங்கள் தேர்தல் ஆணைக்குழுவுக்கு குறித்த கட்சியின் செயலாளரினால் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படலாம் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கப்படலாம்ட. அத்தகைய விண்ணப்பப்படிவங்களை அனுப்பிவைக்கும் போது கடித உறையின் இடப்பக்க மேல் மூலையில் **"அரசியல் கட்சிகளாக கணிக்கப்படுவதற்கான விண்ணப்பப்படிவம் - 2026"** என்று குறிப்பிடப்படுதல் வேண்டும். பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் **தவிசாளர், தேர்தல் ஆணைக்குழு, சரண மாவத்தை, இராஜகிரிய (10107)** என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

02. விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியில் உரிய நேரம் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்காது.

03. அரசியற் கட்சியொன்றாக கணிக்கப்படுவதற்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தை உரிய முறையில் பூரணப்படுத்தி 2472/21 இலக்க,2026.01.21ஆம் திகதிய வர்த்தமானியில் தரப்பட்டுள்ள அளவுகோல்களின் படி உரிய முறையில் தயாரிக்கப்பட்ட ஆவணங்களுடன் கட்சியின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

04. தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வலைத்தளத்திலிருந்து (www.election.gov.lk) விண்ணப்பப்படிவத்தை பதிவிறக்கம் செய்யலாம். மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களிலிருந்தும் தேர்தல்கள் செயலகத்திலிருந்தும் உரிய விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

05. கட்சி ஏற்றுக்கொள்ளப்படுமாயின் 2471/24 ஆம் இலக்க, 2026.01.13ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் தரப்பட்டுள்ள அனுமதித்த (ஆ) அட்டவணையிலுள்ள கட்சிச் சின்னங்களில் அக்கட்சிக்கு ஒதுக்கிக்கொடுக்க எதிர்பார்க்கப்படுவது எச்சின்னம் என்பதை அக்கோரிக்கையில் திட்டவட்டமாக குறிப்பிடுதல் வேண்டும்.

06. விண்ணப்பப்படிவத்தை பூரணப்படுத்தி அதனோடு பின்வரும் ஆவணங்களின் அத்தாட்சிப்படுத்திய நிழற்படப் பிரதிகளை தேர்தல் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தேவைப்படும் பட்சத்தில், மூலப்பிரதிகள் பரிசீலிக்கப்படும்.

6.1 கட்சி யாப்பு
6.2 கட்சியின் உத்தியோகத்தர் சபையின் பட்டியல்
6.3 கட்சியிலுள்ள பெண் உத்தியோகத்தர்களின் பெயர்கள் (கடந்த 04 ஆண்டுகளில்)
6.4 கட்சியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குக் கூற்றுக்கள்
*(விண்ணப்பப்படிவத்தை சமர்ப்பிக்கும் ஆண்டுக்கு முந்திய நான்கு(4) ஆண்டு காலத்திற்குரிய)*
6.5 கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம்
6.6 அரசியல் கட்சியொன்றாக சமீபத்திய நான்கு ஆண்டு காலத்துள் தொடர்ச்சியாக இயங்கியதை உறுதிப்படுத்துவதற்காக சமர்ப்பிக்கக்கூடிய அனைத்து ஆவணங்களையும் வெவ்வேறான 04 கோப்புகளில் ஆண்டுகள் வாரியாக தனிவேறாக சமர்ப்பித்தல் வேண்டும்.

07. அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக கணிக்கப்படுவதற்கு முன்வைக்கும் ஒரு கோரிக்கை தொடர்பில் 2009 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் (விசேட) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(5), (6), (7) ஆகிய பணிப்புகள் அறுதியும் இறுதியுமானவையாகும்.

08. விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பிக்கும் போது 2472/21 ஆம் இலக்க, 2026.01.21 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியில் தரப்பட்டுள்ள அரசியல் கட்சிகளை அங்கீகரித்தல் சம்பந்தமான 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 8(9) ஆம் உப பிரிவின்படி சட்டத்தின் 7 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள தேர்தல்களின் நோக்கத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியொன்றாக அங்கீகரிக்கப்படுவதை செயல்வலுப்படுத்தலும் செயற்றிறனாக அமுல்படுத்துவதற்கும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் பணிப்புகளின்படி செயலாற்றப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்படுதல் வேண்டும

**ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க**
தவிசாளர்,
தேர்தல் ஆணைக்குழு

தேர்தல் ஆணைக்குழு,
தேர்தல்கள் செயலகம்,
சரண மாவத்தை, இராஜகிரிய (10107)

2026, சனவரி மாதம் 28 ஆம் திகதி

குறிப்பு :- இது சம்பந்தமாக 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் ஏற்பாடுகளைப் பரிசீலித்தல்

**இணைப்பு 02**

| அலுவலக பாவனைக்கு | 26/ |
|---|---|

# தேர்தல் ஆணைக்குழு

**1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க**
**பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் கீழ்**
**அரசியற் கட்சிகளை அங்கீகரித்தல் - 2026**
**விண்ணப்பப்படிவம்**

**1.** அரசியல் கட்சியின் பெயர் :-
*(சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் கட்டாயமாக குறிப்பிடப்பட வேண்டும்.)*

I. සිංහල :- ........................................................................................................

II. தமிழ் :- ........................................................................................................

III. English :- ........................................................................................................

**2.** உத்தேச கட்சிச் சின்னம் :- ........................................................
(**2471/24** ஆம் இலக்க, **2026.01.13** ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் (ஆ) அட்டவணையில் தரப்பட்டுள்ள சின்னங்களிலிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும்.)

**3.** கட்சி அலுவலக முகவரி :- ........................................................................................
..............................................................................................................................

**4.** கட்சி அலுவலகத் தொலைபேசி இல. - 4.1 நிலையான : ..........................................
4.2 தொலைநகல் : .......................................
4.3 மின்னஞ்சல் முகவரி : ............................

**5.** கட்சிச் செயலாளரின் பெயர் :- ...........................................................................

**6.** கட்சிச் செயலாளரின் தேசிய அடையாள அட்டை இல. :-..................................................

**7.** கட்சிச் செயலாளரின் முகவரி :-...........................................................................
..............................................................................................................................

**8.** கட்சிச் செயலாளரின் தொலைபேசி இல. :- கையடக்க : .......................................
நிலையான : .......................................

**9.** கட்சிச் செயலாளரின் மின்னஞ்சல் முகவரி :- ...................................................................

**10.** கட்சியைப் பதிவுசெய்ய இதற்கு முன்னர் விண்ணப்பித்திருப்பின்,
10.1 விண்ணப்பித்த ஆண்டு : ........................................................
10.2 கோரிய கட்சிப் பெயர் : ........................................................
10.3 அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்ட திகதி : ........................................................

**11.** விண்ணப்பப்படிவத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :
*(அனைத்து ஆவணங்களும் முறையாக இலக்கமிடப்பட்டு* ***இரண்டு பிரதிகளில் வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)***

| ஆவணம் | உண்டு | இல்லை |
|---|---|---|
| 11.1 கட்சி யாப்பு | | |
| 11.2 கட்சி உத்தியோகத்தர் சபையின் பெயர்ப்பட்டியல் | | |
| 11.3 கட்சி உத்தியோகத்தர்கள் சபையிலுள்ள பெண் உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியல் (04 ஆண்டுகளுக்குரிய) | | |
| 11.4 பதிவுசெய்யப்பட்ட கணக்காய்வாளர் ஒருவரினால் கணக்காய்வு செய்யப்பட்ட கட்சியின் கணக்கு அறிக்கைகள் | | |
| 11.5 கட்சியின் நிகழ்கால கொள்கைப் பிரகடனம் | | |
| 11.6 நான்கு(4) ஆண்டுகளுக்குரிய அரசியல் செயற்பாட்டை உறுதிப்படுத்தும் தகவல்கள் அடங்கிய கோப்பு *(ஒவ்வோர் ஆண்டுக்கும் வெவ்வேறாக கோப்புகளைத் தயாரித்து சமர்ப்பிக்க வேண்டும்.)* | | |

]

**12.** 1981 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தின் 7(5)(ஆ)(11)(அ) அல்லது (ஆ) பிரிவுகளுக்கு அமைய பதிவுசெய்து கொள்வதற்கு விண்ணப்பிப்பதாயின்,

12.1 இக்கட்சி, சுயேச்சையாக அல்லது கூட்டணியாக கடந்த பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டதா? ...................................................................

12.2 போட்டியிட்டிருப்பின், அவ்வாறு போட்டியிட்ட தேர்தல் மாவட்டங்கள் :

.......................................................................................................................................

12.3 தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை ::

.......................................................................................................................................

12.4 கூட்டணியாக போட்டியிட்டிருப்பின், அவ்வாறு கூட்டணி அமைத்த கட்சியின்/ கூட்டணியின் பெயர் :

.......................................................................................................................................

12.5 கூட்டணியில் கட்சி அங்கத்தவர்கள் போட்டியிட்டிருப்பின் -

12.5.1 போட்டியிட்ட அங்கத்தவர்களின் எண்ணிக்கை : .....................................................

12.5.2 போட்டியிட்ட அங்கத்தவர்ளின் தகவல்கள் : ..........................................................

| தொடர் இல. | போட்டியிட்ட அங்கத்தவர்ளின் பெயர் | முகவரி | போட்டியிட்ட மாவட்டம் |
|---|---|---|---|
| i | | | |
| ii | | | |
| iii | | | |
| iv | | | |
| v | | | |
| vi | | | |
| vii | | | |
| viii | | | |

12.6 குறித்த கூட்டணி அமைத்தல் தொடர்பான கடிதம்/புரிந்துணர்வு ஒப்பந்தம் | உண்டு | இல்லை |

*(உரிய முகவரியின் அத்தாட்சிப்படுத்திய பிரதியொன்றை சமர்ப்பிக்க வேண்டும்.)*

.................................................................................. *(அரசியல் கட்சி)* தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள், எனது அறிவுக்கெட்டிய வகையில் உண்மையானவையும் சரியானவையும் என்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

...............................
திகதி

...........................................
செயலாளரின் கையொப்பம்

(பதவி இலச்சினை)